

அருப்புக்கோட்டை ஒன்றியம் செட்டிக்குறிச்சியில் அங்கன்வாடி மையம் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் தலைமையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் திறந்து வைத்தார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, மாவட்ட திமுக பொருளாளர் KVKR பிராபாகரன், ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷன், பொன்ராஜ், மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினர் சௌந்தர், அருப்புக்கோட்டை நகர் மன்றத் தலைவர் சுந்தரலட்சுமி சிவப்பிரகாசம் இருந்தார்.



கடலூர் மாவட்டம் ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சி உட்பட்ட மலைமேடு பகுதியில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கடையை, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்து, பொது விநியோகத்திட்ட குடிமைப் பொருட்களை பயனாளிகளுக்கு வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சி.பி.ஆதித்யா செந்தில்குமார், ம.சிந்தனைச் செல்வன் எம்.எல்.ஏ. , கூடுதல் ஆட்சியர் இரா.சரண்யா, பேரூராட்சி மன்ற தலைவர் செல்வி தங்க ஆனந்தன், ஆத்மா குழு தலைவர் தங்க.ஆனந்தன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மாற்றுத் திறனாளி மாணவர்களை

# பொறுப்பு மிக்கவர்களாக உருவாக்க அரசுடன் இணைந்து உதவிட வேண்டும்!

## தருமபுரியில் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் பேச்சு!



தருமபுரி, அக்.21-

மாற்றுத்திறனாளி மாணவர்கள் வாழ்க்கையில் தலை நிமிர்ந்து நடந்து தங்கள் குடும்ப பாரத்தைச் சுமக்கும் பொறுப்பு மிக்கவர்களாக அவர்களை உருவாக்க அரசுடன் நாமும் இணைந்து உதவிட வேண்டும் என செவித் திறன் குறையுடையோர் அரசு மேனிலைப் பள்ளியின் 50 வது ஆண்டு நிறைவு பொன் விழாவில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் குறிப்பிட்டார்.

தருமபுரி மாவட்ட மாற்றுதிறனாளிகள் நலத்துறை சார்பில் நடைபெற்ற செவி திறன் குறையுடையோர் அரசு மேல் நிலை பள்ளியின் 50 வது ஆண்டு நிறைவு பொன் விழாவில் கலந்து கொண்டு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பொன் விழா மலரை வெளியிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் விருப்ப நிதியிலிருந்து தருமபுரி செவித்திறன் குறையு டையோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளியின் 105 மாணவர்களுக்கு தலா ரூ.1000/ வீதம் ரூ.1.05 இலட்சம் மதிப்பில் அஞ்சலக சேமிப்பு வைப்புத்தொகையை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கி.சாந்தி, முன்னிலையில் வழங்கினார்.

இந்த கூட்டத்தில் அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் பேசியதாவது:

தர்மபுரியில் செயல்பட்டு வரும் இந்த மாற்றுத் திறனாளிகள் பள்ளி 50 ஆண்டுகளை பூர்த்தி செய்து பொன்விழா கொண்டாடுகிறது. இந்த ஊரே இந்த பள்ளியை தத்து எடுத்துக் கொள்ள வேண்டும். மனசாட்சியுடன் இந்த பள்ளியின் வளர்ச்சிக்காக நாம் பங்களிப்பை செலுத்த வேண்டும். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் உடல்உறுப்புகளும், மனவளர்ச்சியும் குன்றிய நிலையில் வாழ்ந்தவர்களுக்குப் புத்துணர்வும் புது வாழ்வும் அளிப்பதற்காக ஊனமுற்றவர் என்ற சொல்லை நீக்கி, மாற்றுத்திறனாளிகள் என அவர்களுக்குப் பெயர் தந்து அவர்கள் நலன்களை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசின்கீழ் மாற்றுத்திறனாளிகள் நலத் துறை என 27.3.2010 அன்று தனியே ஒரு துறையை புதிதாக ஏற்படுத்தி, அதை தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்து அதன்மூலம் பல்வேறு சிறப்புத் திட்டங்களை உருவாக்கி எண்ணற்ற சலுகைகளை வழங்கினார். அவர் வழியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய ஒட்டு மொத்த சமுதாய வளர்ச்சி அடையும் நோக்கில், மாற்றுதிறனாளிகள் துறையினை தனது நேரடி கண்காணிப்பில் வைத்து மாற்றுத்திறனாளிகளுக்கென எண்ணற்ற திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

இந்தப் பள்ளியின் மேம்பாட்டிற்காக பலர் ஏற்கனவே பல்வேறு உதவிகளை செய்து இருக்கிறார்கள். தற்போது தர்மபுரி எம்.பி.தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 லட்சத்தை இந்தப் பள்ளியின் மேம்பாட்டிற்கு வழங்குவதாக அறிவித்துள்ளார். இலக்கியம்பட்டி ஊராட்சி மன்ற கவுன்சிலர் சாந்தி காவேரி தனது சொந்த நிதியிலிருந்து ரூ.50 ஆயிரத்தை இந்தப் பள்ளியின் வளர்ச்சிக்காக வழங்குவதாக அறிவித்துள்ளார். இது போல் நாம் ஒவ்வொருவரும் நம்மால் இயன்ற உதவியை இந்த பள்ளிக்கு செய்ய வேண்டும்.

இந்த பள்ளியில் படிக்கும் மாற்றுத்திறனாளி மாணவர்கள் வாழ்க்கையில் தலை நிமிர்ந்து நடந்து தங்கள் குடும்ப பாரத்தை சுமக்கும் பொறுப்பு மிக்கவர்களாக உருவாக நாம் மனமார உதவி செய்வதில் முன்னிலை வகிக்க வேண்டும். இவர்களுக்கு உதவுவதில் நமக்குள் ஆக்கபூர்வமான போட்டி மனப்பான்மையுடன் செயல்பட வேண்டும்.

தர்மபுரி மாவட்டத்தில் 27185 மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மன வளர்ச்சி குன்றியோருக்கான உதவித் தொகை ரூ.1500ல் இருந்து ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படுகிறது. கல்வி உதவித்தொகை, இலவச பஸ் பயணம், முதுகு தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டமும், சுய தொழில்புரிய மாற்றுத்திறனாளிகளுக்கு வங்கி கடனுடன் கூடிய மான்யம் வழங்கும் திட்டமும்,இரு கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டமும்,அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாற்றுத்திறனாளி மாணக்கர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டமும், பார்வையற்றோர், காது கேளாத மற்றும் வாய் பேசாத மாற்றுத்திறனாளிகளுக்கு செல்போன் வழங்கும் திட்டமும், இரு சக்கர நாற்காலி, மூன்று சக்கர சைக்கிள், கருப்பு கண்ணாடி போன்ற உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதோடு தர்மபுரி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வேலை வாய்ப்பு முகாமை விரைவில் நடத்தி பல்வேறு நிறுவனங்களில் அவர்களுக்கு வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அமைச்சர் எம். ஆர். கே.பன்னீர்செல்வம் பேசினார்.

விழாவில் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே.மணி, வெங்கடேஸ்வரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ. சுப்ரமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பி.என்.பி.இன்பசேக ரன், கே.மனோகரன் நகர்மன்ற தலைவர் லட்சுமி மாது, மாவட்டப் பொருளாளர் வே.தங்கமணி, கைம்பெண் நலவாரிய உறுப்பினர் ரேணுகாதேவி, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திருமதி.செண்பகவள்ளி,தருமபுரி தொகுதி பொறுப்பாளர் டாக்டர்.ஏ.கே. தருண்,ஒன்றிய செயலாளர்கள் இல.கிருஷ்ணன், எம்வீடி.கோபால், ஏரியூர் செல்வராஜ்,சிவப்பிரகாசம்,பி.எஸ்.சரவணன்,முத்துக்குமார்,சந்திரமோகன், வேடம்மாள்,ரத்தினவேல், அன்பழகன், மாது, சபரிநாதன் மற்றும் முன்னாள், இந்நாள் மாநில,மாவட்ட நிர்வாகிகள்,பேரூர் கழக செயலாளர்கள்,பேரூராட்சி தலைவர்கள், அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் மற்றும் பள்ளி தலைமையாசிரியர் திருமதி. தே.ஜெனிலாஜோன்ஸி, அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மக்கள் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும்

# நாடுகளில் இந்தியா முதலிடம் என்பது காலக்கொடுமை!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, அக். 21-

மக்கள் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் நாடுகளில் இந்தியா முதலிடம் என்பது காலத்தின் கொடுமை என்று 'தினகரன' நாளேடு தலையங்கத்தில் விமர்ச்சித்துள்ளது.

இதுகுறித்து அக். 20 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறியுள்ளதாவது:-



தினகரன்

காலக்கொடுமை

வறுமையை ஒழிப்பதற்கான முயற்சிகளை உலக நாடுகள் அனைத்தும் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. அதேபோல் வறுமையின் தாக்கம் நீடிக்கும் நாடுகள் குறித்த பல்வேறு தகவல்களும் வெளியிடப்பட்டு வருகிறது. இந்தவகையில் தற்போது ஐக்கிய நாடுகளின் வளர்ச்சி திட்டம் மற்றும் ஆக்ஸ்போர்டு மனித வறுமைமனிதவள மேம்பாட்டு அமைப்பு புதிய ஆய்வு முடிவு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், "உலகளவில் போர் மற்றும் அமைதியின்மை நிலவும் நாடுகளில் வசிக்கும் 45.50 கோடி மக்கள் வறுமையில் சிக்கியுள்ளனர். இது மொத்த மக்கள் தொகையில் 40 சதவீதமாகும். இவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் 18 வயதுக்கு உட்பட்டவர்கள். உலகளவில் 27.9 சதவீதம் குழந்தைகள் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். உலகளவில் 112 நாடுகளில் வசிக்கும் 630 கோடி பேரில் 110 கோடி மக்கள் வறுமையின் பிடியில் சிக்கியுள்ளனர்," என்று அதிர்ச்சி தகவலை தெரிவித்துள்ளது.

மேலும், "இந்தியாவை பொறுத்தவரை 23.40 கோடி மக்கள் வறுமையின் கோரப்பிடியில் சிக்கி யுள்ளனர். இதற்கு அடுத்த படியாக பாகிஸ்தானில் 9.30 கோடி மக்களும், எத்தியோப்பியாவில் 8.60 கோடி மக்களும், நைஜீரியாவில் 7.40 கோடி மக்களும், காங்கோ நாட்டில் 6.60 கோடி மக்களும் வறுமையின் பிடியில் சிக்கி யுள்ளனர்." என்றும் ஆய்வுகள் தெரிவித்துள்ளது. இதன் படி வறுமையின் தாக்கம் அதிகமுள்ள நாடுகளில் இந்தியா முதலிடத்தில் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இது நாடு முழுவதும் பெரும் அதிர்வுகளோடு பல்வேறு கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

உலக வங்கியின் கூற்றுப்படி வறுமை என்பது முதலில் பசியை குறிக்கிறது. அதே நேரத்தில் இது ஆபத்தான பணிச்சூழல்கள், பாதுகாப்பற்ற வீடுகள், சத்தான உணவு பற்றாக்குறை, நீதிக்கான சமத்துவமின்மை, சுகாதார பாதுகாப்புக்கு மட்டுப்படுத்தப்பட்ட அணுகல், பட்டினிப் பிரச்சினைகள், வீடற்ற தன்மை, அடிப்படை வசதிகள் இல்லாமை என்று அனைத்திற்கும் அடிப்படையாக இருக்கிறது வறுமை. இவை அனைத்தையும் கணக்கிட்டு முழுமையாக ஆய்வு செய்த பிறகே வறுமை பட்டியல் வெளியிடப்படுகிறது.

இந்த கணக்கீட்டின் படி பசியில் மட்டுமல்ல. பல்வேறு நிலைகளிலும் 23.40 கோடி இந்திய மக்கள் பின் தங்கி நிற்கின்றனர் என்பது அம்பலமாகியுள்ளது. அடிப்படை வசதிகள் அனைத்திலும் நாடு விஞ்ஞானத்திலும், தொழில் வளர்ச்சியிலும் அசுர வேகத்தில் வளர்ந்து வருகிறது. நவீன கட்டமைப்புகள், கண்டுபிடிப்புகள், சாதனைகள் என்று அனைத்திலும் சாதனை படைத்து வருவதாக ஒன்றிய ஆட்சியாளர்கள் தினமும் வெளியிடும் அறிக்கைகள் அணிவகுத்து நிற்கிறது. கடந்த 9ஆண்டுகளில் வறுமையின் விகிதமானது 18 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது என்று அரசாங்க சிந்தனைக் குழுவான நிதி ஆயோக் அறிக்கை தெரிவித்துள்ளது.

ஆனாலும் மக்கள் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் நாடுகளில் முதலிடத்தில் இந்தியா என்பது தான் காலக்கொடுமை. வறுமை என்பது நிதி ஆதாரங்களின் பற்றாக்குறை மட்டுமல்ல. மனிதர்களின் கண்ணியத்தை வறுமை சிதைக்கிறது. வாய்ப்புகளை வரம்பிடுகிறது. துன்பத்தின் சுழற்சியை நிலைநிறுத்துகிறது. இதை கருத்தில் கொண்டே 'வறுமை என்பது வன்முறையின் மோசமான வடிவம்' என்றார் தேசத்தந்தை மகாத்மா காந்தி.

மதத்திற்காக கோட்சேவை தூக்கிப்பிடிக்கும் ஆட்சியாளர்கள், மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காக மகாத்மாவின் சிந்தனை குறித்தும் சிந்திக்க வேண்டும். அப்போது தான் இந்தியாவில் வறுமை என்னும் இருள்விலகும். மக்களின் வாழ்க்கை தரமும் உண்மையாக ஒளிரும் என்பதே நிதர்சனம்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறியுள்ளது.

### 20 சதவிகித போனஸ்: தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு

# மொத்த விற்பனை பண்டகசாலை தொ.மு.ச. கோரிக்கை மனு!

## துறைச் செயலாளரிடம் டி.யு.சி.எஸ்.பத்மநாபன் வழங்கினார்!

சென்னை, அக். 21-

தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் தொ.மு.ச. சார்பில் கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் 20%சதவிகித போனஸ் வழங்கிடக்கோரியும், கூட்டுறவு சங்கங்கள் நடத்தும் நியாய விலைக்கடை களுக்கு அரசின் பொது விநியோகத்திட்டத்தை செயல்படுத்துவதால் உண்டாகும் இழப்பிற்குரிய மானியத்தை வழங்கிடக்கோரியும் தொ.மு.ச. பேரவை பொதுச்செயலாளர் மாநிலங்களவை உறுப்பினர் மு.சண்முகம் ஒப்புதலுடன் பேரவைத்தலைவர் கி.நடராஜன், துணைத் தலைவர் இரா.பொன்னுராம் ஆகியோரின் வழிகாட்டுதலுடன் கோரிக்கைகளை உடன் நிறைவேற்றிடக் கோரி தமிழ்நாடு அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர். கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை. ஜெ. இராதாகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்க ளின் பதிவாளர் முனைவர் என்.சுப்பையன் ஆகியோரை சந்தித்து மாநில பொதுச்செயலாளர் சு. பத்மநாபன் தலைமையில் நிர்வாகிகள் மனு அளித்தனர். மனுவை பெற்றுக் கொண்ட அதிகாரிகள் கோரிக்கைகளை நிறை வேற்றித் தருவதாக உறுதி அளித்தனர். அதுபோது டி.யு.சி. எஸ். திராவிட தொ.மு.ச. பொதுச்செயலாளர் இராஜன் சாமிநாதன் மற்றும் பி.கஜேந்திரன் ஆகியோர் இருந்தனர்.

### தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு!

# முதல்வருக்கு - தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வூதியர்கள் சங்கம் நன்றி!

## சங்கத் தலைவர் ஜெ.கணேசன் – செயலாளர் கி.தயாளன் அறிக்கை!

சென்னை, அக். 21-

தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படியினை உயர்த்தி அறிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வூதியர்கள் சங்கத்தின் சார்பில், அதன் தலைவர் ஜெ.கணேசன், செயலாளர் கி.தயாளன் ஆகியோர் தங்கள் சங்கத்தின் நன்றியினைத் தெரிவித்து முதல்வருக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள்.

அது வருமாறு:-

தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வூதியங்கள் சங்கத் தலைவர் ஜெ. கணேசன், செயலாளர் கி.தயாளன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நமது இந்தியத் திருநாட்டில் திராவிடத்தின் சமத்துவ கொள்கையினை நாடு முழுவதும் பரப்பிட அல்லும் பகலும் சூறாவளியாக சுழன்று முழுமூச்சாக பாடுபடும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வூதியர்கள் சங்கத்தின் சார்பான பணிவான வாழ்த்துக்கள்.

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்ந்து வலியுறுத்திவரும் கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்து, எதிர்வரும் காலங்களில் ஒன்றிய அரசு அகவிலைப்படி உயர்வை உயர்த்தி அறிவிக்கும்போதெல்லாம், உடனுக்குடன் தமிழ்நாடு அரசும் அதைப் பின்பற்றி அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர்களுக்கும் அகவிலைப்படி உயர்வு செயல்படுத்தப்படும் என்று ஏற்கனவே வெளியிட்ட அறிவிப்பினைதொடர்ந்து, தற்போது 50 சதவீதமாக உள்ள அகவிலைப் படியை 01.07.2024 முதல் 53 சதவீதமாக உயர்த்தி வழங்கிட முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்ற தாரக மந்திரத்தை அடிப்படையாக கொண்டு இயங்கிவரும் தமிழ்நாடு அரசு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக 16 இலட்சம் தமிழ்நாடு அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் அவர்கள் மனம் குளிரும் வண்ணம் இன்று (18.10.2024) முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்,

மேலும் இதனால் ஆண்டு ஒன்றுக்கு 1931 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும் எனினும், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் நலன் கருதி இதற்கான கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும் என்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

மேற்படியான வெளியிட்டமைக்கு இனிய அறிவிப்பினை முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வூதியர்கள் சங்கத்தின் சார்பான இதயங்கனிந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.



கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக்கல்லூரி வளாகத்தில், மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் , மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு, கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத், ஆகியோர் முன்னிலையில் 423 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கௌரிசங்கர், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி ,நகர மன்ற தலைவர் பரிதா நவாப் , ஒன்றிய செயலாளர் தனசேகர், பொதுக்குழு உறுப்பினர் அஸ்லாம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் 19.10.2024 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள அரசு மணிமண்டபத்தில் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களின் திருவுருவச்சிலை, நீதிக்கட்சியின் வைரத்தூண் சர்.ஏ.டி. பன்னீர் செல்வம் அவர்களின் திருவுருவச்சிலை, ஏழிசை மன்னர் தியாகராஜ பாகவதர் அவர்களின் திருவுருவச்சிலை ஆகியவற்றிற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, மணிமண்டப வளாகத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் ராஜாராமன். மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், எம்.பழனியாண்டி, அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.